## மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 மே 24 ஆம் திகதிய பீஈ/பீஎப் 21 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் வரைபு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம்ஆண்டின் போது பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டமைக்கப்பட்ட இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்தின் மொத்த மூலதனமான ரூபா 373.5 மில்லியன் நிதியத்தால் முதலீடு செய்யப்பட்டிருந்தது. நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் அக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் ஒருங்கிணைக்கும் தேவைப்பாடு ஏற்படின் 2008 இன் கணக்காண்டு முதல் புலமைப்பரிசில் பொறுப்பு நிதியத்தால் ஒருங்கிணைப்பு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2 கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

சனாதிபதி நிதியத்திலிருந்து உயர் தரக் கல்வியைப் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களுக்காக 50 சதவீதம் பொறுப்பு நிதியத்தினூடாக செலவிடப்பட்டிருந்த போதிலும், புலமைப்பரிசில்களுக்காக மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விதம், மாணவர் உதவுதொகை தீர்மானிக்கப்படும் முறை மற்றும் வருடாந்தம் வழங்கப்பட்டிருந்த புலமைப்பரிசில் அளவு தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய கணக்குகள்

இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவகத்துடன் குத்தகை ஆதன உடன்படிக்கையில் 5(ஏ)(1) நிபந்தனையின் படி, குத்தகை வாடகையாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் தேறிய இலாபத்தில் 20 சதவீதம் அல்லது ரூபா 8 மில்லியன் தொகை எனும் இரண்டில் கூடுதலான பெறுமதி வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை இவ்வாறு அறவிடப்படாத வருடாந்த குத்தகை வாடகை வருமானம் ரூபா 46,625,659 ஆகக் காணப்பட்டது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவு | நிதியத்தின் நோக்கங்களும் இலக்குகளும் எய்தப்படும் செயற்பாடுகளுக்காக இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் ஓர் பொருள் தொடர்பாக தீர்வை வரிகளிலிருந்தும் இறக்குமதி வரிகளிலிருந்தும் நிதியத்தை விலக்களிப்பதற்கு சட்டரீதியான ஏற்பாடு காணப்பட்ட போதிலும் இதனைக் கருத்திற்கொள்ளாது மோட்டார் வாகனம் ஒன்று தீர்வை வரியுடனான பெறுமதியான ரூபா 5,100,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததனால் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 3,074,248 தொகை நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) 2005 திசெம்பர் 19 ஆம் திகதிய 33 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரி அங்கீகாரம் இன்றி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் தனியார் வங்கி ஒன்றில் ரூபா 5,885,790 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயலாற்றல்

நிதியத்தின் மூலம் புலமைப்பரிசில்கள் வழங்கல் தொடர்பான தகவல்கள் மற்றும் சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை | பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் சதவீதமாக வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை | தொழில்நுட்ப கல்லூரிகளுக்கும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் மொத்த எண்ணிக்கை | புலமைப்பரிசில்கள் வழங்கலுக்கான ஏற்பட்ட செலவினம் | புலமைப்பரிசில் வழங்கும் வைபவங்களுக்கான செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | % | | | ரூபா | ரூபா |
| 1999/2000 | 11,324 | 5,958 | 52.6 | 550 | 6,508 | 229,443,550 | 5,118,665 |
| 2000/2001 | 11,717 | 6,275 | 53.5 | 601 | 6,876 | 245,651,650 | 2,982,856 |
| 2001/2002 | 11,380 | 6,206 | 54.5 | 417 | 6,623 | 362,024,850 | 3,690,075 |
| 2002/2003 | 23,568 | 12,246 | 52.0 | 522 | 12,768 | 379,473,500 | 4,622,591 |
| 2003/2004 | 12,623 | 8,147 | 64.5 | 550 | 8,697 | 437,707,100 | 785,597 |
| 2004/2005 | 13.653 | 9,000 | 65.9 | 847 | 9,847 | 487,929,950 | 516,476 |
| 2005/2006 | 15.478 | 8,009 | 51.7 | 1,335 | 9,344 | 644,682,550 | 941,490 |
| 2006/2007 | 15,996 | 7,799 | 48.8 | 1,045 | 8,844 | 717,665,900 | 3,050,987 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2007/2008 | 18,714 | 9,500 | 50.7 | 1,663 | 11,163 | 711,135,000 | 1,328,963 |
| 2008/2009 | 19,340 | 10,000 | 52.0 | 1,500 | 11,500 | 695,747,550 | 2,057,249 |
| 2009/2010 | 20,111 | 10,000 | 49.72 | 1,564 | 12,574 | 763,746,500 | 2,035,922 |
| 2010/2011 | 20,274 | 10,300 | 50.80 | 1,500 | 11,800 | 694,519,600 | 2,876,999 |
| 2011/2012 | 26,944 | 11,300 | 41.94 | 2,000 | 13,300 | 675,938,770 | - |

2008 முதல் 2012 காலப்பகுதிக்காக புலமைப்பரிசில் பொறுப்பு நிதியத்திற்காக சனாதிபதி நிதியத்தால் பெறப்பட்ட பங்களிப்பு மற்றும் முதலீட்டு வட்டி வருமானக் கூட்டுத்தொகையால் புலமைப்பரிசில் வழங்கலுக்காக 51 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையான அளவு பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.2 செயற்பாட்டுத் திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பாடசாலைகளின் முறைப்படியான படிமுறைகளை மேம்படுத்துவதற்காகவும் நிர்மாணிப்பதற்காகவும் மூலதனச் செலவினத்தை ஏற்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்காக பாடசாலைகளைத் தேர்ந்தெடுக்கும் முறையான நடைமுறை மற்றும் பிரமாணங்கள் பொறுப்பு நிதியத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டு முதல் பாடசாலை அபிவிருத்தி நிதியத்தால் முதலீடு செய்யப்பட்டிருந்த உழைக்கப்பட்ட ரூபா 549,448,935 தொகையான வட்டி வருமானத்தில் 29 பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 234,005,500 தொகையான அதாவது 43 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(இ) பாடசாலையில் இலத்திரனியல் வியாபார வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 30 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இலத்திரனியல் வியாபார வசதிகளைச் செயற்படுத்துகையில் பாடசாலைகளில் இதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகையால் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டு அத் தொகை பாதுக்கவில் உள்ள பாடசாலையில் கேட்போர் கூடம் நிர்மாணிக்கப்படுவதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

## 2.3 நோக்கங்களுக்கு முரணான கொடுப்பனவுகள்

பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் நோக்கமற்ற உயர் தர கல்வி கற்கும் மாணவர்களுக்காக புலமைப்பரிசில் வழங்கப்படுவதற்காக மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் முறையே ரூபா 49,485,000 தொகையும் ரூபா 24,654,000 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

## 2.4 மஹாபொல புலமைப்பரிசில் மற்றும் திறமைப்புலமைப்பரிசில்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாபொல புலமைப்பரிசில் மற்றும் திறமைப்புலமைப்பரிசில் குறித்த காலப்பகுதியின் போது பெறப்படாது ஒழுக்க மீறல் செயற்பாடுகளில் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்ட தவணைப்பணம் மீள நிதியத்திற்கு மீளச் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட 02 மாத காலத்திற்கு மேற்பட்ட ரூபா 7,287,200 தொகை பல்கலைக்கழகத்தின் ஏனைய உயர் கல்வி நிறுவகத்தால் நீண்ட காலமாக பிடித்து வைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக பல்கலைக்கழகங்களும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களுக்கும் முறையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிராத காரணத்தால் அத் தொகை ஆக்கபூர்வமாக முதலீட்டில் ஈடுபடுத்தப்படுவதனால் நிதியத்திற்கு ஈட்டப்பட்டிருக்கக் கூடிய நலன் கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஆ) மஹாபொல புலமைப்பரிசில் தவணை 2006 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் சாதாரண புலமைப்பரிசிலிற்காக ரூபா 2,150 தொகையும் திறமைப் புலமைப்பரிசிலிற்காக ரூபா 2,200 தொகையுமாக திருத்தப்பட்டிருந்த போதிலும் 7 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் புலமைப்பரிசில் தொகை வாழ்க்கைச் செலவினத்திற்கு ஒப்பாக திருத்துவதற்கு கவனம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளருக்கு அறிக்கையிடப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) நிலுவை வருமானம்

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) புலமைப்பரிசில் வழங்கல்